கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்)		
	வருவாய்	மூலதனம்	கடன்
50 ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	2,122,61,49	-	-
51 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	1,203,31,07	-	-
பெருமொத்தம்	**8,488,68,44**	**1,780,99,93**	**846,06,85**

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2011 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

9. இடைக்கால வரவு-செலவுத் திட்டம், 2011-2012, பொது விவாதமும் பதிலுரையும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2011-2012 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம் மற்றும் பதிலுரை. இன்று கில்லட்டின் நேரம். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய பின்னர், மாண்புமிகு நிதி அமைச்சர் பதிலுரைக்குப்பின் முன்பண மானியக் கோரிக்கைகள் மீதான வாக்கெடுப்பு பிற்பகல் 1-30-க்குள் எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தனது உரையைக் கொடுக்கப்பட்டுள்ள நேரத்திற்குள் முடித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். முதலில், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார். பேசுவதற்கு ஒதுக்கப்பட்ட நேரம் 7 நிமிடங்கள்.

***டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கைமீது நடைபெறும் விவாதத்தில் பங்குகொண்டு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். 'எனக்கு கிரீடங்கள் தேவையில்லை. நான் மறுபடியும் பிறக்க விரும்பவில்லை. என் நோக்கமெல்லாம் என் அருகில் இருப்பவர்களின் துன்பத்தைத் துடைப்பது மட்டும்தான்' என்று சொன்ன மருத்துவத்தின் தந்தை ஹிப்போகிரட்டீஸ் வழியில் தனக்குக் கிடைத்த வாய்ப்புகளை, தான் ஏற்றுக்கொள்ளாமல் தன்னைச் சார்ந்திருக்கின்ற சகாக்களுக்கு